# பாடம் 18 மோசேயின் பிறப்பு (யாத் 1-2)

ஒவ்வொரு குடும்பத்திலும் 'குழந்தை பிறப்பு' என்பது பெற்றோராலும், குடும்பத்தினராலும் மிகவும் சந்தோஷப்படக் கூடிய ஒன்று. இந்த பாடத்தில் இந்த அழகான குழந்தையின் பெற்றோர் மிகவும் கடினமான ஓர் தீர்மானம் எடுக்க நேரிட்டது. முதல் மூன்று மாதங்கள் இந்தக் குழந்தையை அவர்கள் வீட்டிலே ஒளித்து வைத்தனர். அவன் உயிருக்கே அது பயமுறுத்தலாய் தோன்றியது. ஆனால் யோசித்துப் பார்க்க கூடாத அளவிற்கு தேவன்,இந்தக் இஸ்ரவேல் குழந்தையைக் குறித்து ஒரு பெரிய திட்டம் வைத்திருந்தார்.

யாக்கோபின் சந்ததியார் இஸ்ரவேல் என்று அழைக்கப்படுகிறார்கள். ஏனென்றால் தேவன் யாக்கோபின் பெயரை இஸ்ரவேல் என்று மாற்றினார் என்பதை மறவாதிருங்கள். இஸ்ரவேலர்கள் நானூறு ஆண்டுகளாய் எகிப்தில் வாழ்ந்த போது அவர்கள் எண்ணிக்கை மிகவும் அதிகமாக பெருகியது. இது தேவன் ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் கொடுத்த வாக்குத்தத்தமான வானத்து நட்சத்திரங்களை போல் காணப்படுவீர்கள் என்பதை நிறைவேற்றுகிறதாய் இருக்கிறது.

யோசேப்பை அறியாத புதிய பார்வோன் ஆட்சிக்கு வரும் வரை இஸ்ரவேலர் நன்கு நடத்தப்பட்டார்கள். இந்தப் புதிய பார்வோன் இஸ்ரவேலரின் எண்ணிக்கை அதிகமாக கூடிக் கொண்டுப் போவதை கண்டு மிகவும் பயந்தான். அவன் யுத்தம் துவங்கினால் இஸ்ரவேலர் எகிப்தியரின் எதிரிகளோடு சேர்ந்து வருவார்களே என்று பயந்தான்.

பார்வோன், இஸ்ரவேல் ஜனங்களின் எண்ணிக்கையை கட்டுபடுத்த முதலாவதாக அவர்களை அடிமைகளாக நடத்தி மிகவும் கொடுமைப்படுத்தினான். அவன் அவர்களை செங்கல் செய்யவும் பின்பு பட்டணங்களை கட்டவும் வற்புறுத்தினான். அப்படி அவர்களை கொடுமையாக நடத்தின போதும் அவர்கள் பலுகிப் பெருகினார்கள்.

ஆகவே எகிப்தியர்கள் அவர்களை அடித்து அவர்களுடைய வேலைப் பளுவை அதிகரித்தார்கள். தங்கள் வயலில் செய்யும் சகலவித வேலையினாலும் அவர்கள் தங்கள் கால்களினாலே நீர்பாய்ச்சவும் செய்தார்கள். அப்படியிருந்தும் இஸ்ரவேலருடைய

எண்ணிக்கை அதிகரித்தது. எனவே பார்வோன் ஒரு புதிய திட்டம் தீட்டினான்.

அவன் மருத்துவச்சிகளிடம் “நீங்கள் எபிரேய ஸ்திரீகளுக்கு பிரசவம் பார்க்கும் போது ஆண்பிள்ளைகளானால் கொன்று போடுங்கள். பெண் பிள்ளைகளானால் உயிரோடே காப்பாற்றுங்கள்” என்று கட்டளையிட்டான்.

மருத்துவச்சிகள் ராஜாவுக்குப் பயப்படுவதைக் காட்டிலும் தேவனுக்கு பயந்ததினால் அவர்கள் பெண்பிள்ளைகளோடு ஆண்பிள்ளைகளையும் உயிரோடே காப்பாற்றினார்கள். அவர்கள் பார்வோனிடம் “எபிரேயே பெண்கள், எகிப்திய பெண்களைப் போல அல்ல. அவர்களைக் காட்டிலும் பலசாலிகளாய் இருக்கிறார்கள். நாங்கள் போகும் முன்னே அவர்கள் தங்கள் பிள்ளைகளைப் பெற்று விடுகிறார்கள்” என்றனர்.

இதினிமித்தம் தேவன் மருத்துவச்சிகளுக்கு நன்மை செய்தார். ஏனென்றால் அவர்கள் ஆண்பிள்ளைகளைக் கொல்ல மறுத்தார்கள்.

இஸ்ரவேலர் இன்னும் அதிகமாய் பலுகிப் பெருகினார்கள். ஆகவே பார்வோன் புதிய கட்டளையைப் பிறப்பித்தான். அதென்னவெனில் புதியதாய்ப் பிறக்கிற ஒவ்வொரு ஆண்குழந்தையும் நைல் நதியில் துக்கி எறியப்படவேண்டும்.

இப்படியான உபத்திரவ நேரத்தில் லேவியின் சந்ததியில் உள்ள எபிரேய குடும்பத்தில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. லூக்கா என்பவர் இந்த குழந்தை தேவனுடைய பார்வையில் மிகவும் அருமையாகக் காணப்பட்டது. (அப் 7:20) என எழுதியுள்ளார்.

இந்தக் குழந்தையின் பெற்றோர் இவன் ஒரு அசாதாரணமானக் குழந்தை என்பதை அறிந்து ராஜாவின் கட்டளைக்கு பயப்படாதிருந்தார்கள். (எபி 11:23)

குழந்தையின் தாய் அவனை மூன்று மாதம் ஒளித்து வைத்தாள். ஆனால் நாட்கள் போகப் போக அந்தக் குழந்தையை அதிகாரிகளுக்கு மறைத்து வைப்பது மிகவும் கடினமாய் இருந்தது.

கடைசியாக அவள் தன் மகனைக் காப்பாற்ற ஒரு திட்டமிட்டாள். நாணலினால் ஒரு பெட்டியைச் செய்து அதில் தண்ணீர் உள்ளே புகாமல் பாதுகாக்க அதற்கு கீல் பூசினாள். ஒரு நாள் அதிகாலையில் சுற்றிலும் ஒருவரும் இல்லாத நேரத்தில் அந்தக் குழந்தையை கூடையில் வைத்து வீசாமல் அழகாய் நைல் நதியின் கரையின் ஓரத்தில் நாணற் செடிக்களுக்குள் வைத்தாள்.

அந்தக் குழந்தையின் சகோதரியாகிய மீரியாம் அந்தக் குழந்தைக்கு என்ன நடக்கும் என்று ஆவலோடு பார்த்துக் கொண்டு இருந்தாள்.

அடுத்த நாள் காலையில் பார்வோனின் குமாரத்தி அங்கே குளிக்க வந்திருந்தாள். அங்கே நாணற் செடிகளுக்குள் அந்தப் பெட்டியைக் கண்டு தன் தாதியை அழைத்து அந்த பெட்டியை எடுத்து வரும்படிச் சொன்னாள்.

அதை அவள் திறந்த போது அந்தக் குழந்தை அழுததால் பார்வோன் குமாராத்தி மிகவும் இரக்கப்பட்டாள். ‘‘இது எபிரெயக் குழந்தைகளில் ஒன்று’’ என்றாள்.

உடனடியாக மீரியாம் தான் ஒளிந்து கொண்டிருந்த இடத்திலிருந்து வெளியே வந்து, “இந்த குழந்தையை வளர்க்க ஒரு ஏபிரேயத் தாயை அழைத்து வரட்டுமா?’’ என்று பார்வோன் குமாரத்தியிடம் கேட்டாள்.

‘‘சரி சீக்கிரமாய் போய் அழைத்து வா’’ என்று அவள் சொன்னாள். உடனே மீரியாம் வேகமாய்ச் சென்று குழந்தையின் தாயையே அழைத்து கொண்டு பார்வோனின் குமாரத்தியிடம் வந்தாள்.

பார்வோனின் குமாரத்தி அந்த குழந்தையின் தாயிடம் பட்சமாய் பேசி ‘‘நீ இந்தக் குழந்தையை எனக்காக வளர்த்திடு. அதற்கான பணத்தை நான் உனக்கு கொடுத்திடுவேன்” என்றாள். அந்தக் குழந்தை வளர்ந்து பெரியவனானபோது அவனை அவள் மீண்டும் பார்வோனின் குமாரத்தியிடம் விட்டுச் சென்றாள்.

அவன் அவளுக்கு தத்து பிள்ளையானான்.

அவன் அரண்மனையில் கற்றுக் கொடுக்கப்படும் எல்லா கலைகளையும், கல்வியையும் கற்றுத் தேர்ந்தவனானான். அவள் அவனை “ஜலத்தில் இருந்து எடுத்தேன்” என்று சொல்லி மோசே என்று பேரிட்டாள்.

தேவன் மருத்துவச்சிகளை, அந்த எபிரேய தாயை, குழந்தையின் சகோதரியை மற்றும் பார்வோனின் மகளை, பார்வோனுடைய கட்டளையை அவமாக்க பயன்படுத்தினார்.

இந்தப் பாடம் மிகவும் முக்கியம், ஏனென்றால் இஸ்ரவேலருக்கு தேவன் கொடுத்த வாக்குதத்தத்தை மறக்கவில்லை. தேவன் சர்வ சாதராண மக்களைப் பயன்படுத்தி தன் நோக்கத்தை நிறைவேற்றுகிறார். சில நேரங்களில் தேவன் பயன்படுத்தும் முக்கிய நபர்கள் பெண்களாகவும் இருக்கலாம்.

இந்தப் பாடத்தின் முக்கிய உண்மை என்னவென்றால் தேவன் தம்முடைய நோக்கத்தை அவர் குறித்திருக்கிற நேரத்தில் முடிப்பார். தேவன் தாம் தெரிந்துக் கொண்ட தம் மக்களின் நோக்கத்தை உபத்திரவத்தின் மத்தியிலும் நிச்சயமாக நிறைவேற்றுவார்.

இந்த பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

1. ஏன் பார்வோன் இஸ்ரவேலரைத் துன்புறுத்தினான்? (6 வினாடிகள் நிற்க)

   “பார்வோன் இஸ்ரவேலர் பலுகிப் பெருகினதைக் குறித்து பயந்தான்” என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. இஸ்ரவேலருடைய வளர்ச்சியை தடுக்க பார்வோன் கடைசியாக எடுத்த தீர்வு என்ன? (6 விநாடிகள் நிற்க)

   “பிறக்கும் ஒவ்வொரு புதிய எபிரேய ஆண் குழந்தையும் நைல் நதியில் போடப்பட்ட வேண்டும்” என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. பார்வோனின் குமாரத்தி அவனுக்கு என்ன பெயரிட்டாள்? ( 6 விநாடிகள் நிற்க)

“அவள் தண்ணீரிலிருந்து எடுத்தபடியால் அவனுக்கு மோசே என்று பெயரிட்டாள்” என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடந்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

இந்த பாடத்தை இதுவரை அறிந்திராத ஒருவருக்கு எடுத்துச் சொல்லுங்கள். மற்றவர் தெரிந்தெடுத்து பயன்படுத்தாத போதிலும் தேவனை பின்பற்ற ஆர்வமாய் இருக்கிறவர்களை தேவன் எப்படி பயன்படுத்துகிறார் என்பதை குறித்து கலந்துரையாடவும்.

இப்படிபட்ட யாரையாவது உங்களுக்கு தெரியுமா? என்று கேளுங்கள். மற்றும் உங்கள் குடும்பத்திலும், உங்கள் நண்பர்கள் மத்தியிலும் உள்ள பெண்கள் தேவனுக்கு முக்கியமானவர்கள் என்பதை அவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

பாடம் முடிந்தது